


உலகம் முழுவதும் மாறிவரும் தட்பவெப்பம் குறித்தும் ஆப்பிரிக்க நாடுகளின் பொருளாதாரத் தேக்க நிலை குறித்தும் உட்கார்ந்து யோசித்துக் கவலைப்படுவதற்கான ஜி எட்டு நாடுகளின் (ஜி8 என்றால், Group of Eight என்று பொருள். இங்கிலாந்து, அமெரிக்கா, கனடா, பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான், ரஷ்யா ஆகிய தேசங்கள் இந்தக் குழுவில் அடக்கம்.) பிரதிநிதிகள், அதற்கு முதல் நாள்தான் இங்கிலாந்துக்கு வந்திருந்தார்கள். ஜூலை 6 முதல் 8 வரையிலான மூன்று நாள் மாநாடு. உலகம் முழுவதும் இங்கிலாந்தை கவனித்துக் கொண்டிருந்த சமயம். பிரதமர் டோனி ப்ளேருக்கு உள்ளூரில் மக்கள் செல்வாக்கு குறைந்துகொண்டிருப்பதாக வந்துகொண்டிருந்த செய்திகளை, அந்த மாநாட்டில் பேசும் பேச்சின் மூலம்தான் அவர் போக்கவிருந்தார்.

இங்கிலாந்தில் ஒரு ரகளை செய்ய இதனைக் காட்டிலும் ஓர் உன்னதமான சந்தர்ப்பம் கிடைத்துவிடுமா என்ன? ஆறாம் தேதியிலிருந்து எட்டாம் தேதி வரைதானே மாநாடு? நாம் ஏழாம் தேதி பட்டாசு வெடித்துவிடலாம் என்று முடிவு செய்து, கான் நண்பர்களுக்கு அறிவித்தது அல் காயிதா.

திட்டம் மிகத் தெளிவாக முன் கூட்டியே அனைவருக்கும் அறிவிக்கப்பட்டிருந்தது. நான்கு பேரில் மூன்று பேர் லண்டன் பாதாள ரயில் நிலையங்களுக்குப் போய்விட வேண்டும். ஆளுக்கு ஒரு ரயிலை எடுத்துக்கொண்டு தகர்த்துவிடுவது. நான்காவது நபர் ஏதாவது ஒரு மாநகரப் பேருந்தில் மனித வெடிகுண்டாக ஏறி, நிறைய மக்கள் பயணம் செய்யும் சமயமாகப் பார்த்து வெடிக்கச் செய்வது.

அத்தனை பேரும் பாதுகாப்பாக உடலெங்கும் வெடிகுண்டுகளைக் கட்டிக்கொண்டு, மேலே அழகாக ஜாக்கெட் போட்டு மறைத்துக்கொண்டுவிட வேண்டும். கையில் சூட்கேஸ் அல்லது ஹோல்ட் ஆலுடன் யாருக்கும் சந்தேகம் வரமுடியாதபடி, சராசரிப் பயணிகள் போலவே போய் ஒழுங்கு மரியாதையாக டிக்கெட் வாங்கிக்கொண்டு, ரயில் மற்றும் பஸ்ஸில் ஏறவேண்டும். யாருடனும் அநாவசியப் பேச்சுகள் கூடாது. வண்டியில் ஏறும் நேரத்துக்கும் வெடிக்கும் நேரத்துக்கும் அதிக இடைவெளி இல்லாதிருப்பது நல்லது. ஏறும்போதே கூட்டம் உள்ள வண்டியாகப் பார்த்து ஏறுவது சிலாக்கியமானது.

வெளிநாட்டுத் தலைவர்கள் இங்கிலாந்துக்கு வந்திருக்கிறபடியால், வழக்கத்தைக் காட்டிலும் கொஞ்சம் கூடுதல் செக்யூரிடி கெடுபிடிகள் இருக்கலாம். மெட்டல் டிடெக்டர் பரிசோதனைகள் இருக்கலாம். ஆகவே, உடலில் கட்டிய பாம் தவிர, வேறு ஒரு சாவிக்கொத்து கூட எடுத்துச் செல்லவேண்டாம் என்று முன்னெச்சரிக்கையாகச் சொல்லிவைத்தார்கள். சூட்கேஸ்களில் கூட வெறும் பனியன், ஜட்டி இருந்தால் போதும் என்று சொல்லப்பட்டிருந்தது.

பொதுவாக இம்மாதிரி பொது இடங்களில் குண்டுவெடிக்கிற திட்டம் என்றால், அல் காயிதா கூடுமானவரை தான் தயாரிக்கும் குண்டுகளில் இரும்பு சம்பந்தப்பட்ட உபகரணங்களை உபயோகிக்காது. பிளாஸ்டிக்தான். ரிமோட் மூலம் வெடிப்பது என்றால், பாட்டரி வேண்டியிருக்கும். மேற்படி சம்பவத்தில் அதற்குக் கூட வாய்ப்புக் கொடுக்காமல் கையால் நிமிண்டியே வெடிக்கச் செய்யும் விதத்தில் குண்டுகளைப் பொருத்தியிருந்தார்கள். ஏனெனில், மெட்டல் டிடெக்டர் சோதனைக்கு ஆளாகவேண்டி வந்தால், 'பீப் பீப்...' என்று அந்தச் சனியன் கத்தி, காரியத்தைக் கெடுத்துவிடக்கூடுமே என்கிற கவலை.

இப்படி ஒவ்வொரு விஷயத்தையும் முன்கூட்டி யோசித்துத் திட்டமிட்டு, மனித வெடிகுண்டுகளைத் தயாரித்து அனுப்பிவைத்தது, அல் காயிதா. நான்கு பேரும் கோயிலுக்கு நேர்ந்துவிட்ட ஆடுகள் போல, அவரவர் இலக்குகளை நோக்கிப் போக ஆரம்பித்தார்கள். யாரும் முன்னதாகத் தத்தம் வீடுகளில் இது குறித்தெல்லாம் சங்கேதமாகக் கூடச் சொல்லியிருக்கவில்லை. உணர்ச்சிகரமான கடைசிக் கண்ணீர்க் கடிதமெல்லாம் எழுதி ஸ்டாம்ப் ஒட்டாமல் போஸ்ட் செய்யவில்லை. அத்தனை பேரும் அன்றைய காலை நேரத்து ஆஃப் பாயிலோ, ஆம்லெட்டோ... நாஷ்டாவை முடித்துவிட்டு, வேலைக்குப் போவது போலத்தான் புறப்பட்டார்கள். லண்டன் பாதாள ரயில் நிலையத்துக்கு நான்கு பேரும் ஒன்றாகத்தான் வந்து டிக்கெட் வாங்கினார்கள். அப்போதுதான் அந்த க்ளோஸ்டு சர்க்யூட் டிவி, அவர்களைப் படம் பிடித்திருக்கிறது. டிக்கெட் வாங்கிய பிறகுதான் ஆளுக்கொரு ரூட்டில் ரயிலைப் பிடித்தார்கள்.

மணி எட்டு நாற்பது.. மூன்று ரயில்கள். ஒவ்வொன்றும் ஒவ்வொரு திசையில் போகிற ரயில்கள். முதல் குண்டு வெடித்த செய்தி பன்னிரண்டே நிமிடத்தில் வந்துவிட்டது. சரியாக எட்டு ஐம்பதுக்கு வெடித்தது அது. லிவர்பூல் தெருவுக்கும் ஆல்ட்கேட் ரயில்நிலையத்துக்கும் நடுவே நடந்த கோரச் சம்பவம்.

வெடித்த சப்தம் கேட்டவுடனேயே இரண்டு ரயில்கள் மோதிக்கொண்டு விட்டன என்றுதான் முதலில் நினைத்தார்கள். எழுந்த கரும்புகையும் அலறல் சப்தங்களும் ரத்தக் காயங்களுடன் கதவுகளைப் பிளந்துகொண்டு விழுந்த மனிதர்களும், சில வினாடிகளில் நடந்ததைப் புரிய வைத்துவிட்டார்கள்.

கிட்டத்தட்ட அதே நேரம். அதே பாணி. கிங்ஸ் க்ராஸ் ரயில் நிலையத்துக்கும் ரஸ்ஸல் சதுக்கத்துக்கும் இடையே போய்க்கொண்டிருந்த இன்னொரு ரயிலிலும் சில பெட்டிகள் இதே மாதிரி வெடித்துச் சிதறின. இந்த ரயில் வெடித்தபோது, சிலபேர் வெளியே சற்றுத் தொலைவிலிருந்து நேரில் பார்த்திருக்கிறார்கள். முதலில் வெளியிலிருந்து ரயிலை நோக்கி யாரோ தாக்குதல் நடத்துவது போலத்தான் தெரிந்தது என்று, இவர்கள் பின்னால் சாட்சியளித்தபோது சொல்லியிருக்கிறார்கள். அது ஒரு தோற்ற மயக்கமாக மட்டுமே இருக்கமுடியும் என்று மிக விரைவில் தெரிந்துவிட்டது.

ஏனெனில், மேலும் ஒரு சில நிமிட இடைவெளியில் எட்வேர் ரோடு ரயில் நிலையத்தில் ஒரு வண்டி நுழைந்த தருணத்தில் வெடித்துச் சிதறியபோதும் இதே போன்ற உணர்ச்சி சிலருக்கு ஏற்பட்டது, பின்னால் விசாரணையின்போது தெரியவந்தது.

மூன்று ரயில்கள். ஐம்பதுக்கும் மேற்பட்டவர்கள் உடனடி மரணம். கிட்டத்தட்ட எழுநூறு பேர் படுகாயமடைந்து உயிருக்குப் போராடிக்கொண்டிருந்த நிலையில், உடனடியாக மருத்துவமனைகளுக்குத் தூக்கிச் செல்லப்பட்டார்கள். அதில் இருபத்திரண்டு பேர் மிக மிக மோசமான பாதிப்புகளுக்கு உள்ளாகியிருந்தார்கள். சிலருக்குக் கைகள் துண்டாகியிருந்தன. நூற்றுக்கணக்கான பெண்களும் ஆண்களும் அலறிக்கொண்டு ரயில் நிலையங்களெங்கும் ரத்தம் சொட்டச் சொட்ட குறுக்கும் நெடுக்கும் ஓடிக்கொண்டிருந்தார்கள். ரயில்வே ஆபீஸர்களுக்கும் காவல் துறையினருக்கும் என்ன செய்வதென்றே புரியவில்லை. குண்டுவெடித்துச் செத்தவர்களை

விட, ஒரு கலவரத்தில் மிதிபட்டுச் சாகக்கூடியவர்களின் எண்ணிக்கை கண்டிப்பாக அதிகமாகவே இருக்கும். எப்படிக் கட்டுப்படுத்துவது? என்ன செய்து சமாளிப்பது? யாருக்குமே புரியவில்லை.

கிட்டத்தட்ட ஒருமணி நேரம் அந்தப் பிராந்தியமே ரணகளமாகிவிட்டது. சைரன்கள் ஒலிக்க, காவல் துறையினர் மக்களை அமைதிப்படுத்தி, அப்புறப்படுத்தப் படாதபாடு பட்டார்கள். விஷயம் உடனடியாகப் பிரதமர் அலுவலகத்துக்கும் மகாராணியாரின் அரண்மனைக்கும் தெரிவிக்கப்பட்டது. நாடெங்கும் ரயில்வே உஷார் படுத்தப்பட்டது. ஆங்காங்கே இருந்த அத்தனை போலீஸாரும், ஸ்டேஷன்களில் கொண்டு குவிக்கப்பட்டார்கள். ஆபீஸுக்குப் போகாவிட்டால் பாதகமில்லை என்று, ரயில் ஏற வந்த அத்தனை பேரையும் வீட்டுக்கு அனுப்பிக்கொண்டிருந்தார்கள்.

ஒட்டுமொத்த தேசத்தின் கவனமும் பாதாள ரயில் நிலையங்களின் மீது குவிந்திருந்த அந்தச் சமயத்தில்தான் (காலை 9.47 மணி), பஸ் ஏறப்போன நான்காவது பிரகஸ்பதி, முப்பதாம் நம்பர் டவுன் பஸ்ஸில் ஏறி, மார்பிள் ஆர்ச்சுக்கும் டவிஸ்டாக் சதுக்கத்துக்கும் இடையே தன் குண்டை வெடிக்கச் செய்தான்.

குப்புற அடித்துக் கவிழ்ந்து தூள் தூளானது அந்தப் பேருந்து. அடுத்த வினாடியே லண்டன் முழுவதும் பாதாள ரயில் நிலையங்கள் மூடப்பட்டன. மாநகரப் பேருந்துகள், இருக்கும் இடங்களிலேயே நிறுத்தப்பட்டு, பயணிகள் பத்திரமாக இறக்கி அனுப்பப்பட்டனர்.

கிட்டத்தட்ட லண்டன் நகரையே பூட்டி வைத்துவிட்டார்கள். ஒரு ஈ, கொசு கூட வெளியிலிருந்து உள்ளேயோ, உள்ளிருந்து வெளியேவோ போகமுடியாதபடி, தடுப்பு அரண்களை அமைத்துவிட்டார்கள். ஜி எட்டு மாநாட்டிலிருந்து அவசரமாக பர்மிஷன் வாங்கிக்கொண்டு வெளியே வந்த டோனி ப்ளேர், 'யாரும் கலவரமடைய வேண்டாம்' என்று கதறாத குறையாகக் கேட்டுக்கொண்டார். என்ன கேட்டு என்ன புண்ணியம்? மக்கள் கிட்டத்தட்ட பயத்திலேயே உயிரை விட்டுவிடும் நிலையில்தான் இருந்தார்கள்.

பேய் வேகத்தில் புலன் விசாரணை முடுக்கிவிடப்பட்டது. ஒரு மணி நேரத்தில் கிட்டத்தட்ட அறுநூறு ஏரியாக்களைச் சந்தேக லிஸ்டுக்குள் கொண்டுவந்து, சுற்றி வளைத்துச் சல்லடை போட்டுத் துழாவ ஆரம்பித்தார்கள். (அத்தனையும் முஸ்லிம்கள் வசிக்கும் ஏரியாக்கள்தான் என்பதைச் சொல்லத் தேவையில்லை.) அஃபிஷியலாகவும் அன் அஃபிஷியலாகவும் எத்தனையோ பேரைக் கைது செய்து, ரகசியமாகத் தள்ளிக்கொண்டு போய் உரிய முறையில் விசாரித்தார்கள்.

மறுபுறம், அன்றைய தினம் லண்டன் ரயில் நிலைய சிசி டி.வி.யில் பதிவான ஒவ்வொரு வினாடிக் காட்சியையும் கண்கொத்திப் பாம்பாகக் கண்காணித்து, சந்தேகத்துக்குரிய அந்த நான்கு நண்பர்களை வட்டமிட்டார்கள். அவர்கள் ஸ்டேஷனுக்குள் நுழையும்போது, யாருக்கும் எழாத சந்தேகமெல்லாம் சம்பவம் நடந்தபிறகுதான் எழுகிறது. அடடே, இவர்கள் போட்டுக்கொண்டிருக்கிற ஜெர்க்கின்கள் மட்டும் ஏன் இத்தனை குண்டாக இருக்கிறது? இவர்கள் மட்டும் ஏன் அடிக்கடி திரும்பித் திரும்பிப் பார்த்தபடி நடக்கிறார்கள்? நான்குபேரும் ஒன்றாகத்தான் உள்ளே வருகிறார்கள். அடிக்கடி ஜாடையில் பேசிக்கொள்கிறார்கள். ஆனால், திடீரென்று எங்கே பிரிந்து போனார்கள்? இவர்கள் நடையில் மட்டும் ஏன் இத்தனை பதற்றம் இருக்கிறது? ஒரு கை ஏன் எப்போதும் இடுப்பிலேயே இருக்கிறது?

கேள்விகள், கேள்விகள், மேலும் கேள்விகள்.

இதற்கிடையில், சம்பவம் நடந்த இரண்டரை மணி நேரத்தில் (மதியம் சுமார் 12.10 மணி வாக்கில்), அல் காயிதா ஆதரவு இணையதளம் ஒன்றில், சுமார் ஒரு பக்கம் வரக்கூடிய ஒரு வாக்குமூல அறிக்கை வெளியிடப்பட்டிருப்பதாக பிபிசி தொலைக்காட்சி அறிவித்தது. Der Spiegel என்கிற ஜெர்மானிய மொழிப் பத்திரிகை ஒன்றும் இதே தகவலை உடனடியாக ஊர்ஜிதப்படுத்தியது. அதன்படி லண்டன் குண்டுவெடிப்புகளுக்கு 'அல் காயிதாவின் ஐரோப்பியப் பிரிவைச் சார்ந்த ஒரு

ரகசிய இயக்கம்' பொறுப்பு என்று தெரியவந்தது.

அது என்ன ரகசிய இயக்கம்?

அதன் பெயர் அல் கல்லாட்டி (Al qallati தமிழில் புனித அரண்மனை எனலாம்.) என்று அந்த இணையதள அறிக்கை சொன்னது. உண்மையில் இம்மாதிரியான பெயரில் லண்டனிலோ, இங்கிலாந்திலோ தனியொரு அமைப்பு இருப்பதாக அதற்குமுன் யாரும் கேள்விப்பட்டது கூட இல்லை. அது ஓர் இணையதளக் குழு. எந்தத் தீவிரவாதக் குழு வேண்டுமானாலும், என்னவிதமான நாசவேலை செய்தாலும் இந்த அல் கல்லாட்டி அல்லது அல் கல்லா குழுவின் தளத்தில் தங்கள் அறிக்கையை வெளியிடலாம். அல் காயிதாவின் பல அறிக்கைகள் இந்தத் தளத்தின் மூலம் முன்னதாக வெளியிடப்பட்டிருக்கின்றன. வேறு பல குழுக்களின் அறிக்கைகளும் இதில் இடம்பெற்றிருக்கின்றன.

இம்மாதிரியான இணையதளங்களில் ஒரு சௌகரியம் என்னவென்றால், யாரும் தங்களை அடையாளம் காட்டிக்கொள்ள வேண்டிய அவசியமே இல்லை. நீங்கள் தீவிர நாத்திகராக இருந்தாலும் திருப்பதி வெங்கடாஜலபதி பேரில் ஏதாவது அறிக்கை எழுதி, போஸ்ட் பண்ணிவிடலாம். ஏண்டா என்று கேட்க ஏழுமலையானால் கூட முடியாது. ஆகவே, இம்மாதிரியான தளங்களில் வெளியாகும் அறிக்கைகளை, நூறு சதவிகிதம் நம்பிவிடமுடியாது.

மேற்படி சம்பவம் நடந்த அன்று, இத்தளத்தில் வெளியான அறிக்கையின் ஒரு வரி சாரம் இதுதான்: '2003-ம் ஆண்டு அமெரிக்காவுடன் ஜோடி சேர்ந்து ஈராக்கினுள் அத்துமீறி நுழைந்ததற்காகவும், ஆப்கனிஸ்தான் மீது அமெரிக்காவுடன் இணைந்து தாக்குதல் தொடுத்ததற்காகவும் பழிவாங்கும் நடவடிக்கையாக இது செய்யப்பட்டது'.

போலீஸெல்லாம் கிடக்கட்டும். வல்லுநர்கள் சும்மா இருப்பார்களா? 2004-ம் ஆண்டு மார்ச் 11 அன்று ஸ்பெயின் நாட்டில் மாட்ரிட் நகரில் நிகழ்த்தப்பட்ட ரயில் குண்டுத் தாக்குதல்களுடன் மேற்படி சம்பவத்தை ஒப்பிட்டு, அதே பாணி, அதே ரகம், அதே உத்தி என்று புல்லரித்து, 'சந்தேகமே இல்லை; இது அல் காயிதாதான்' என்று அடித்துச் சொன்னார், செபாஸ்டியன் கோர்கா (Sebestye'n Gorka) என்கிற புடாபெஸ்டைச் சேர்ந்த ஒரு பாதுகாப்புத்துறை மூத்த அதிகாரி.

ஜூலை 7 சம்பவம் நடந்ததா? ஆகஸ்டு இறுதிவரை சிண்டைப் பிய்த்துக்கொண்டுதான் இருந்தார்கள். செப்டம்பர் 1-ம் தேதி அல் ஜஸீரா தொலைக்காட்சி, ஒரு டேப்பை ஒலிபரப்பியது.

லண்டன் குண்டுவெடிப்புச் சம்பவ நாயகர்கள் நாலு பேரின் தலைவனான முகம்மது சித்திக் கான் என்கிற லண்டன் கான், தனது கடைசிப் பயணத்துக்கு முன்னால் பேசி அனுப்பிய டேப்.